தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

இளங்கலை மாணவர் சேர்க்கை 2022–2023

உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission)

**உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission) நடைபெறும் விதம் : நேரடி கலந்தாய்வு**

உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் கலந்தாய்விற்குரிய குறிப்பிட்ட தேதியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூரில் வந்து கலந்து கொள்ள வேண்டும்.

**உடனடி மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ள நிபந்தனைகள்:**

- உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளுக்கு மட்டுமே பொருந்தும். உறுப்புக் கல்லூரிகளுக்கு பொருந்ததாது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை இடங்கள் ஏதேனும் காலியாக இருந்தால் அவை காலியிடங்களாகவே கருதப்படும்.
- உடனடி மாணவர் சேர்க்கையில் இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்களிடமிருந்து மட்டுமே கலந்தாய்வு கட்டணம் பெறப்படும் மற்றும்
- உடனடி மாணவர் சேர்க்கைக்கு நகர்வு முறை (Sliding System) கிடையாது.

**உடனடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ளலாம்?**

பொது கலந்தாய்வில் இடம் கிடைக்கப் பெற்று கலந்தாய்வினை தவறவிட்டவர்கள் அல்லது சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்ளாதவர்கள் மற்றும் புதிதாக கலந்தாய்விற்கு அழைக்கப்பட்டவர்களும் கலந்து கொள்ளலாம்.

**உடனடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ள கூடாது?**

பொது கலந்தாய்வில் இடம் கிடைக்கப் பெற்று சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்டவர்கள், சேர்க்கை பெற்றவர்கள் அல்லது இடைநிறுத்தம் செய்து கொண்டவர்கள்.

**உடனடி மாணவர் சேர்க்கைக்குரிய கட்டணம்:**

உடனடி மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ளும் மாணவர்கள், கல்லூரியை தேர்வு செய்யும் முன் கலந்தாய்வு கட்டணம் செலுத்த தேவையில்லை. கலந்தாய்வில் இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் SC / SCA/ ST பிரிவு ரூபாய். 1500/– மற்றும் இதர பிரிவினர் ரூபாய். 3000/–செலுத்த வேண்டும்.

**இணைப்புக் கல்லூரிகளுக்கான ஆண்டுக் கட்டணம்**

இணைப்புக் கல்லூரிகளுக்கான ஆண்டுக் கட்டணம் ரூபாய். 40,000/- முதல் ரூபாய். 50,000/- வரை (உணவு மற்றும் தங்குமிடக் கட்டணம் நீங்கலாக) இருக்கும்.

**உடனடி மாணவர் சேர்க்கை நடைபெறும் நாளன்று பின்பற்ற வேண்டியவை,**

- உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் வளாகத்திற்கு வர வேண்டும்.

- உடனடி மாணவர் சேர்க்கையின் போது இணைப்புக் கல்லூரிகளுக்கான உணவு மற்றும் தங்குமிடக் கட்டணம் குறித்த விவரங்களை, மாணவர்கள் இணைப்புக் கல்லூரி ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

- உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொண்ட மாணவர்களின் வருகைப் பதிவேடு குறிக்கப்பட்டு, தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

- உடனடி மாணவர் சேர்க்கையின் போது மாணவர்களுக்கு கல்லூரி காலியிடம் திரையில் தெரிவிக்கப்படும்.

- தரவரிசையின் அடிப்படையில், மாணவர்கள் கல்லூரி மற்றும் பட்டப்படிப்பினை தேர்வு செய்ய அழைக்கப்படுவார்கள்.

- உடனடி மாணவர் சேர்க்கையின் போது இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு கட்டணத்தை செலுத்தி உடனடியாக கல்லூரியில் சேரலாம், பணம் கட்டுவதற்கான வசதி பல்கலைக்கழக வளாகத்திலேயே செய்யப்பட்டு இருக்கும்.

- உடனடி மாணவர் சேர்க்கையின் போது சாதியின் அடிப்படையிலோ அல்லது கல்லூரியிலோ அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டவுடன், காத்திருப்பு பட்டியல் உருவாக்கப்படும்.

- உடனடி மாணவர் சேர்க்கை நடைபெற்ற, ஒரு வார காலத்திற்குப் பிறகு மாணவர் சேர்க்கை காலியிடங்கள் ஏதேனும் இருந்தால் மீண்டும் ஒரு உடனடி மாணவர் சேர்க்கை மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றி நடத்தப்படும்.

- உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என்ற உத்தரவாதம் அளிக்க இயலாது.

# Tamil Nadu Agricultural University

## Undergraduate admissions 2022-2023: Spot Admission

**Mode of spot admission: Offline.** The interested candidates ought to present at Tamil Nadu Agricultural University, Coimbatore on the specified date.

**Conditions for spot admission:**

- Spot admission is applicable **only for affiliated colleges** and not for Government constituent colleges. Vacancies if any in the Government constituent colleges will be kept vacant.
- For spot admission, counselling fee will be collected **only** from the candidates who choose a seat and
- No sliding will be followed

**Who can attend Spot Admission?**

Already applied candidates who have not attended the counselling or certificate verification before or those who have called afresh can also attend.

**Who cannot attend Spot Admission?**

Those who have already attended certificate verification, or got admission or discontinued.

**Fee for Spot Admission:**

Candidates before choosing a seat need not pay the counselling fee. The candidates who choose a seat have to pay the counseling fee of Rs. 1500/- for SC, SCA, & ST, and Rs. 3000/- for others.

**The annual fee for the affiliate colleges:**

The annual fee in the affiliated colleges will be from Rs. 40,000 to Rs. 50,000/- (exclusive of boarding and lodging fees).

**On the day of Spot Admission:**

- The interested candidates ought to report to the admission venue.
- In the venue, candidates can get clarity about the boarding and lodging fee structure of the affiliated colleges from the Staff concerned.
- Attendance will be marked and a ranking of attended candidates will be done.
- The vacant position will be displayed.
- Based on rank, the candidates will be called for choosing the college and seat.
- Candidates who took spot admission can join the college immediately after paying the prescribed annual fee, which will be facilitated in the University venue itself.
- Once all the seats either are filled in the community or in college, a waitlist will be created and
- After a week time if any vacancy arises still, the same methodologies will be followed for filling up the vacancy.

**Calling for Spot Admission does not necessarily GUARANTEE a seat.**